மிஸ் ஆக்னெஸ் ஸ்லாக் என்கிற மாதை நேயர்களில் பலர் அறிந்திருக்கக்கூடும். சில காலத்துக்கு முன்னர் இந்தியாவில் நடைபெறும் மதுவிலக்கு முயற்சியைப் பற்றி தெரிந்துகொண்டுபோகும்படி இந்நாட்டுக்கு விஜயஞ் செய்து நம்மில் பலருடைய உபசரிப்பைப் பெற்றுப் போனார்கள். சென்ற அக்டோபரில் மான்செஸ்டர் சென்ட்றல் சபா மண்டபத்தில் கூடின யுனைட்டெட் கிங்டம் அலையன்ஸ் என்கிற மதுவிலக்கு சங்கத்தின் வருஷாந்தரக் கூட்டத்தில், மந்திராலோசனை சபை மெம்பர்களிலொருவராகிய மிஸ்டர் லீப் ஜோன்ஸ் அக்கிராசனம் வகித்திருக்க, இந்த மாது சிரோமணி இந்தியாவில் நடைபெறும் மதுவிலக்கைப்பற்றி ஒரு பிரேரணை பிரேரித்து உபந்நியாசம் செய்தார்கள். அந்த உபந்நியாசத்தின் சங்கிரகம் இப்போது நம் கைக்கெட்டியிருப்பதால் அதைப்பற்றிச்சிலவார்த்தைகள் கூற விரும்புகிறோம். மிஸ் ஸ்லாக் அம்மாள் பிரேரித்த பிரேரணையின் சாராம்சம் இது: "இந்தியருடைய சகலநன்மைக்கும் பிரிட்டிஷ்கவர்ன்மெண்டார் பொறுப்பாளிகளாயிருக்கிறபடியால் இந்தியருடைய சீர்கேட்டுக்கேதுவாயிருக்கிற குடியைத் தடுக்க அவர்கள் கடமைப் பட்டவர்களாயிருந்தும் அது விஷயத்தில் அவர்கள் செய்திருக்கும் சாதகம் வெகு துர்லபம். குடியால் அவர்கள் அதிக வருமானம் அடையும்படிக்கே பார்க்கிறார்கள். ஆகையால் (1) லைசென்ஸ் ஏலத்தில் விற்பது நீக்கப்படவேண்டுமென்றும், (2) வரிவசூலிக்கும் இலாசாதாரரிடமிருந்து லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரம் எடுபடவேண்டுமென்றும், (3) அந்தந்த ஸ்தலத்துக்கேற்ற ஒழுங்கு கையாடப்படவேண்டுமென்றும் இந்திய மதுவிலக்கு சீர்திருத்தக்காரர் கேட்கிற வேண்டுகோட்களை நாம் மனப் பூர்வமா யாதரிக்கிறோம்." இதைப் பிரேரித்து இது சம்பந்தமாய் உபந்நியாசித்தபோது 30 கோடிப் பிரஜைகளுக்கு இங்கிலாந்து தாயென்றும், அதன் க்ஷேமத்தைப் பிரிட்டிஷார் கவனித்தல் அவசியமென்றும், தாம் இந்தியாவைப் போய்ப்பார்த்த பொழுது மிஷனெரிகள்தான் அந்த ஜனங்களின் நன்மையை மனதில் வைத்துப் பாடுபடுகிறதாகத் தெரியவந்ததென்றும், அப்படியே இங்கிலாந்திலுள்ளவர்களும் அக்கரை காட்டவேண்டுமென்றுஞ் சொல்லி இந்தியாவில் தற்காலம் மதுவருந்துதல் விர்த்தியாகி வருவதைப் பற்றிப் பிற்கூறியபடி எடுத்துக்காட்டினார்கள். கடந்த 30 வருஷத்துக்குள் இந்தியாவில் மதுபானத்தினால் கவர்மெண்டாருக்குண்டாயிருக்கிற வருமானம் நான்கு மடங்காய் அதிகரித்துவிட்டது. சென்ற வருஷம் அதன் தொகை 65 லக்ஷம். பிரதி வருஷமும் பெருகிக்கொண்டே வருகிறது. வங்காளத்தில் சென்ற 5 வருஷங்களில் மதுபான வருமானம் நூற்றுக்கு 50 வீதம்

அதிகரித்திருக்கிறது. 35 வருஷங்களுக்கு முன்னர் இந்தியா முழுமையிலும் வசூலான தொகை சென்ற ஒரு வருஷத்தில் சென்னை இராஜதானியில் மட்டும் வசூலானது. லாஹோரில் 20 வருஷங்களுக்கு முந்தி ஒரு மதுபானக் கடையாவது இருந்ததில்லை. குடிவெறியுள்ள மகமதியனையாவது இந்துவையாவது அங்கே காணமுடியாது. அப்படியிருக்க இப்போது அநேகங்குடியரை அங்கே காணலாம். பம்பாய் மதுவிலக்குச் சங்கத்துப்பிரஸிடெண்டாகிய இந்தியவைத்தியரொருவர், "சிலவருஷங்களுக்குமுன்னே இந்து ஸ்திரீகள் குடித்தார்கள் என்கிற பேச்சே கிடையாது; இப்போது குடியினால்வருந்தும் அநேக ஸ்திரீகளைச் சிகிச்சை செய்யும்படி அந்தப்புரஙகளுக்கு அழைக்கப்படுகிறேன்" என்று சொன்னார். நான் இந்தியாவிலே கூட்டங்கள் நடத்தினபோது கூட்ட முடிவில் எப்போதும் யாராவது ஒரு இந்து கனவான் எழுந்து நின்று பிற்கூறிய வார்த்தைகளைப் பேசுவார்:—"நீர் இங்கிலாந்துக்குப்போனால் இந்தியாவில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வரியின் மேல் ஆசைவைத்து இத்தேச குடிகளாகிய இந்துக்களையும் மகமதியரையும்சீர்குலையச் செய்கிறதைப்பற்றி எங்களுக்கு ஆத்திரம் உண்டாயிருக்கிறதென்று அவ்விடத்து ஜனங்களுக்கு அறிவிப்பீரா? இவ்விடத்தில் கவர்ன்மெண்டாரால் ஆதரிக்கப்படுகிற மதுபான கடைகளெல்லாம் எங்கள் சம்மத விருத்தத்துக்குரியனவென்றும், பிரிட்டிஷ் நாடுகளிலிருந்து சாராயங்களைவராமற்றடுக்கயாதாவது முயற்சி செய்யக்கூடாதா என்றும் தெரிவிக்க மாட்டீர்களா?" என்றிவ்விதம்கேட்பார். பிரிட்டிஷ் அரசாக்ஷி இந்தியாவுக்கு வருமுந்தி அத்தேசத்துக்குரிய மதுபான மிருந்தது ண்டு. ஆனால் 4000 வருஷங்களுக்கு முந்தியே இந்தியாவில் சுராபானஞ் செய்யக்கூடாதென்று கண்டிப்பான விதிகளிருந்தன. மகமதியருக்கும் இந்தியருக்கும் மதுபானத்தைக் கண்டிக்கும் விதிகளிருக்கின்றன. அப்படியிருந்தும் இக்காலத்தில் எல்லாரிலும் உயர்ந்த ஜாதியான் என்பவனே சாராயம் குடிக்க ஆசிக்கிறான். அவர்களுடைய மார்க்கத்துக்கே விரோதமான இந்தக் காரியத்தைக் கவனியாமல் விடுவது தகுதியல்ல. என்றிவ்விதம் கூறி இந்தியருடைய மார்க்கத்துக்கு விரோதமான இந்தக் காரியத்துக்கு கவர்ன்மெண்டாரே பொறுப்பாயிருப்பது மோசத்துக் கிடமாகும் என்று சொன்னார்கள். இப்பால் தாம் பஞ்ஜாப் பட்டணத்திலிருக்கையில் ஒரு இந்து சாராயக்குத்தகைக்காரனைக் கண்டு அவனிடம் பேசினதாகவும், அவனைப் பார்த்து சாராயம் குடிப்பது மார்க்கத்துக்கு விரோதமான காரியமல்லவா? என்று கேட்டதாகவும், அதற்குப்பிரதியுத்தரமாக அவன், "மெய்தான் நான் பெருந் தொகையான பணத்தைக்கொட்டிக்கொடுத்து லைசென்ஸ் பெற்றிருக்கிறேனே, பிரதிநாளும் அநேகம் பேரை நான் குடிப்பியாவிட்டால் என்பாடு அநர்த்தமாய் முடியுமே" என்று சொன்னதாகவும் அந்த அம்மாள் சொல்லி, இந்தியாவின் பலபாகங்களில் லைசென்ஸ் ஏலத்தில் விற்கப்படுகிற தென்றும், அதிக தொகை கொடுக்க மனமுள்ளவர்கள் அதைவாங்குகிறார்களென்றும், சிலபோது மகாபாதகர்கள் லைசென்ஸ் பெற்று சன்மார்க்க நெறிகளையெல்லாம் அழித்துப் பணம் சம்பாதிப்பதையே பெரிய காரியமாக வைத்து ஜனங்களைக் கெடுக்கிறார்களென்றும், ஆகையால் லைசென்ஸ் ஏலத்தில் விற்பதை கவர்ன்மெண்டார் நீக்கவேண்டுமென வற்புறுத்துவது அவசியமென்றும் கூறினார்கள். பின்னும் ரெவினியூ இலாகாதாரர் அதிகாரத்திலிருந்து லைசென்ஸ் பிறப்பிப்பது நீங்குதலவசியம். எத்தனையோ தரம் கவர்ன்மெண்டார் சாராயவிற்பனையைத் தாமே நடத்தல் தகுதியன்றென்று வற்புறுத்தியிருக்கிறோம். அரசாங்கத்தாரே வரிக்கு ஆசைப்பட்டு அதை நடத்தினால் அவர்களே ஜனஙகளுடையசன்மார்க்கத்துக்குஎதிராளிகளாவார்கள். இந்தியாவில் பிரிட்டிஷாரே லைசென்ஸ் உடையவர்கள். அவர்களே வரி வாங்குகிறவர்கள். அவர்களே லைசென்ஸைப்பாகிக்கிறவர்கள். இப்படியிராமல் வரிவாங்குகிற டிபார்ட்மெண்ட் வேறாகவும், லைசென்ஸ்கொடுக்கிறடிபார்ட்மெண்ட் வேறாகவும் இருக்கவேண்டும். எங்கெங்கே பிரிட்டிஷ் ஆட்சியின் சுயாதீனமும் ஆசீர்வாதமும் சென்றதோ அங்கெல்லாம் குடியும் கூடவே போனது மகா துக்ககரமான காரியம் என்றார்கள். மேலும்இந்து கனவான்கள் தங்கள் கூட்டங்களில் ஐரோப்பியர் வந்திருக்கும்போது அவர்களுக்கு ஜலமாவது லெமனேடாவதுகொடாமல் லாகிரிபானங்களை யேன் கொடுக்கிறார்களென்று தாம் பலரிடம் கேட்டதாகவும், அதற்கு லாகிரிப்பானங்கள் கொடாவிடில் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் இந்துக்களுடைய கூட்டங்களுக்கு வருகிறதில்லை யென்று அவர்கள்

மறுமொழி சொன்னதாகவும் அந்த அம்மாள் கூறினர்கள். இவ்வார்த்தைகள் கூறப்படுகையில் வெட்கம் வெட்கம் என்று சபையார் கூக்குரலிட்டார்கள். பிறகு அந்தப் பிரேரணை ஆமோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இந்த வேண்டுகோளுக்கு இந்திய கவர்ன்மெண்டார் செவிகொடுத்து நடப்பார்களென்று நம்புகிறோம்.

Drink among Educated Indians.

படித்த இந்தியர் குடித்தல்.

மேல் நாட்டுக் கல்வியைக் கற்கப்புகுந்த இந்தியர், மேல் நாட்டாருடைய நாகரீகங்களில் பலதைப் பின்பற்றப்போய்க் குடியையுங் கற்றுக்கொண்டார்களென்றும், தற்காலம் அஞ்சத்தக்க விதமாய்க் கல்விகற்ற இந்தியருள் குடி பிராபல்ய மடைந்து வருகிறதென்றும் நமது தூதனிலெடுத்துக் காட்டியிருக்கிறோம். அது விஷயமாய் அதிக சிரமமெடுத்து அவர்கள் எவ்வளவு தூரம் குடியென்னுங் கொடுவிலங்கைப் பூண்டுக்கொண்டிருக்கிறார்களென்பதைக் கடந்த சில வருஷகாலமாய்ப் பரீக்ஷித்தறிந்த சங்கைக்குரிய அலெக்ஸாந்தர் மாபட் வித்தியாபாரகர் "கிறிஸ்டியன் காலேஜ் மாகஸீன்" என்கிற பத்திரிகையில்இரண்டு நீண்ட வியாசங்களெழுதியிருக்கிறார். அவைகளை நம் நேயர்களும் அறியுமாறு அவற்றினின்று முக்கியமான சிலகுறிப்புகளையிவ்விடத்தில் பெயர்த்தெழுதுகிறோம். நம் இராஜதானியில் கல்விகற்ற இந்தியருக்குள் குடிவெறி தீமை விர்த்தியடைவதைப்பற்றி அவர் எழுதுவது :—

சென்னையில் படித்த இந்தியர் சீமை சாராயங்களை வாங்கி யுபயோகிப்பது சர்வ சாதாரணமாய்விட்டது. இதைபற்றி அடிக்கடி இந்தியரே நடத்துகிற பத்திரிகைகளில் கண்டித்தெழுதப்பட்டது. காஸ்மாபாலிட்டன் கிளபில் சாராயம் தாராளமாய் உபயோகிக்கப்படுவதைப்பற்றி விசேஷித்த விதமாய்க் கண்டிக்கப்பட்டது. அந்தக் கிளபைச்சேர்ந்த ஐரோப்பிய யூரேஷிய மெம்பர்களுக்காகவே அங்கே சாராயம் வைக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. திவான் பகதூர் இரகுநாத ராயர் அவர்களும் மற்றவர்களும் அதை நீக்க வேண்டுமென்று பிரயாசப்பட்டார்கள். சங்கத்தைச்சேர்ந்த பெரும் பாலார் அதை நீக்கச் சம்மதியாதிருப்பதால் அம்முயற்சி பலிதமாகவில்லை. அந்தச் சங்கத்தைச்சேர்ந்த பலர் சாராய மருந்துகிறார்கள். சாராயப் பழக்கமே யில்லாத சிலர் தூண்டுதலடைந்து குடியில் விருப்பமுடையவர்களாக அது காரணமாயிருக்கிறதென்று கேள்விப்படுகிறேன். இந்தச் சங்கந்தவிர சென்னையில் இன்னும் இரண்டு சங்கங்கள் மிக இரகசியமாய் சாராயமருந்துகிறதாகச் சொல்லப்படுகிறது. இந்தச்சங்கத்தார் "மெத்தைதவீட்டுச்சகாக்கள்" என்றும், "களியாட்டுச் சகாக்கள்" என்றும்பேர் வைத்துக்கொண்டிருப்பதாய் தெரிகிறது. சிற்றுண்டிகள் பரிமாறும் சில அன்னசாலைகளிலும்படித்த இந்தியருக்குச் சாராய சப்ளை யிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஐகோர்ட்டு வக்கீல்களிலே குடியில் பழகின இந்து கனவான்கள் சிலரிருக்கிறார்களாம். அவர்களிலே ஒருவர்வெளியூரிலே ஒரு வியாச்சியம் நடத்தினபிறகு தலைகால் தெரியாமல் குடித்துவிட்டு வண்டியேறி வரக்கூட சாத்தியமின்றி, வேறொருவரால் வீடு கொண்டுவந்துசேர்க்கப்பட்டாரென்று ஒரு சிநேகிதர் கூறினர்." என்றிப்படி சென்னப்பட்டணத்தில் காரியத்தை யெடுத்துக்காட்டின பிறகு வெளியூர் காரியாதிகளைப்பற்றி மிஸ்டர் மாபட் பிற்கூறியபடி எழுதுகிறார்.

வெளியூர்களிலும் ஐவேஜியுள்ள இந்தியருக்குள் அயல் நாட்டுச் சாராய முட்கொள்ளும் வழக்கம் பலமாயிருக்கிறது. தஞ்சாவூர், கும்பகோணம், திருவாதி இந்த விடங்களிலும் விசேஷம்தஞ்சாவூர் ஜில்லாமுழுமையிலும் படித்த இந்தியருள் குடி அதிகம் என்று சொல்லப்படுகிறது. இந்த ஜில்லாவில் ஜாதிக்கட்டு மிகவும் தளர்ச்சியடைந்திருக்கிறது. அவ்விடத்தார் தங்கள் நாகரீகத்தைப்பற்றிப் பெருமை யுடையவர்களாயிருக்கிறார்கள். மேல் நாட்டு வழக்கப்பழக்கங்களையனுசரிக்க விழைவு காட்டுகிறார்கள். தஞ்சாவூரிலிருந்து தான் (Fashion)நவீன நாகரீகம் மற்ற இடங்களுக்குச் செல்லுகிறதென்று தெரிகிறது. சில நல்ல விஷயத்தில் தஞ்சாவூர்நல்லமாதிரிகாட்டினதுண்டு. எப்படியெனில் பெண்கள் முகத்தில் பச்சைக்குத்திக் கொள்ளாதபடி அவ்வூர் முன்மாதிரி காட்டினது. ஆனால் தீய வழிக்கும் அது முன்மாதிரிகாட்டுகிறது. அங்குள்ள நிலசுவான்தார் பலர் அயல் நாட்டுச் சாராய

ம் அருந்தும் நோக்கமாகவே ஒரு கிளப்பை ஏற்படுத்தினார்களென்றும், அது இப்போ தில்லையென்றும், அதைச்சேர்ந்த பலர் உப தாரிகளாய்ப் போய்விட்டார்களென்றுங் கேள்விப்படுகிறேன். தவிர அயல் நாட்டுச்சாராயத்தைத் தென்னிந்தியா ரெயில்வே கம்பனியார் கும்பகோணத்தில் அதிகமாய் இறக்குமதி செய்கிறார்களென்று கணக்கு ஏற்படுகிறது. வக்கீல்கள் அதிக பணம் சம்பாதிக்கிறதினாலும், அவர்கள் உத்தியோகம் மனசிரமத்துக் கிடமானதாகையாலும் அவர்களில் பெரும்பாலார் சாராயமருந்துகிறதாய்க் காணப்படுகிறது. அவர்கள் மட்டுமன்று அஸிஸ்டன்ட் கலெக்டர், சப்ஜட்ஜ், டாக்டர், உபாத்தியாயர் இவ்வித உத்தியோகஞ் செய்பவர்களும் சாராயப் பழக்க முடையவர்களா யிருக்கிறார்கள் மொத்தத்தில் இந்தத்தீமை எங்கும் பரவி வருகிறது.

இப்படியாக எழுதிக்கொண்டுவந்து, இந்திய பழக்கம் அனேகம் படித்த இந்து வாலிபர்களை அகாலமரணத்துக் குட்படுத்தி வருக்கிறதென்றும், இந்தியாவில் ஐரோப்பிய இராணுவத்தில் முதலாய் சாராயந்தருவது தடுக்கப்பட்டுப்போகப்படித்த இந்தியர் இதன்மேல் பிரியங் கொண்டிருப்பது துக்ககரமான விஷயமென்றும், ஐரோப்பியர் காண்பித்த துன்மாதிரியே இந்தியரை யிப்படிசீர்கேட்டுக்குள்ளாக்கினதென்றும், மதுவிலக்குச்சங்கங்கள் இதுவிஷயத்தில் அக்கரையெடுத்துழைக்கவேண்டுமென்றும் முடித்திருக்கிறார்.

Indian Christians and the Bishop of Southwark.

இந்திய கிறிஸ்தவர்களும், சௌத்வார்க் அத்தியக்ஷரும்.

பிப்ரவரிமீ 15வ சென்னை மெமோரியல் ஹாலில் இச்சென்னையிலுள்ள இங்கிலாந்து சபையைச் சேர்ந்த இந்திய கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடித் தங்கள் மத்தியில் வந்திருந்த கண்ணியம்பொருந்திய சௌத்வார்க் அத்தியக்ஷரவர்களுக்கு நல் வரவு கூறி யுபசரித்தார்கள். அந்தச் சமயத்தில் சென்னை அத்தியக்ஷர் அக்கிராசனம் வகித்தார். இங்கிலாந்து சபையைச்சேர்ந்த பல மிஷனெரிகளும் மற்றும் சுதேச கனவான்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். அக்கிராசனாதிபதி முதலில் சில வார்த்தைகள் பேசி வந்தவரை வரவேற்றார். அப்படிப் பேசினதில், 35 வருஷங்களுக்கு முன்னே தமக்குக் காலேஜ் சிநேகிதனாயிருந்த அத்தியக்ஷரை இப்போது வரவேற்பது தமக்கு அளவற்ற மகிழ்ச்சியை யுண்டுபண்ணுகிறதென்றார். மெமோரியல் ஹால் கட்டடம் கட்டப்பட்ட காரணத்தை அத்தியக்ஷருக்கு எடுத்துக்கூறி அது கட்டப்பட்ட சிப்பாய்க் கலகத்தின் காலத்தில் தென்னிந்தியாவில் இங்கிலாந்து சபைக்கிறிஸ்தவர்கள் 7500 பேர்தானிருந்தார்களென்றும், இப்போது அத்தொகை 6 லக்ஷமாக விர்த்தியடைந்திருக்கிறதென்றும், சென்னை தற்காலம் இந்தியாவுக்குள் ஒரு விசேஷித்த கிறிஸ்தவ நகரமென்றும் கூறினார். இப்பால் அத்தியக்ஷருக்கு மாலை சூட்டப்பட்டு உபசாரப் பத்திரமொன்று வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதில் சீமையிலிருந்து தாய்ச்சபையைச்சேர்ந்த கண்காணிமார் இவ்விடத்திலுள்ள கிறிஸ்தவசபை விர்த்தியை வந்து பார்வையிட்டது இதுதான் முதல் தடவையென்றும், இப்படியவர்கள் வருவதினாலே தாய்ச்சபைக்கும் இங்குள்ள சபைக்குமிருக்கிற பந்தம் நெருக்கமாகும் என்றும் எடுத்துக் காட்டப்பட்டது. சென்னை இங்கிலாந்து சபை கிறிஸ்தவர்கள் காட்டின அன்பின் உபசரிப்பினால் மனநெகிழ்ச்சியடைந்த சௌத்வார்க் அத்தியக்ஷரவர்கள் எழுந்து அவர்கள் காட்டின பக்ஷத்துக்கு மிகவும் நன்றி கூறுவதாகச்சொன்னார். சொல்லிவிட்டு தமது மனதிலிருந்த இரண்டு காரியங்களை யெடுத்துக் கூறினார். முதலாவது தற்காலம் இந்நாட்டில் மேல்நாட்டாருக்கும் கீழ்நாட்டாருக்கும் இருக்கிற ஐக்கியம் அவ்வளவு திருப்திகரமாயில்லையென்பது விசனமான காரியமென்றும், ஆயினும் நாளடைவில் அது சரிப்பட்டுப் போமென்றும், 50 வருஷங்களுக்கு முன்னே பிரஞ்சுக்காரருக்கும் இங்கிலீஷ்காரருக்குமிருந்த சமுசயம் ஐக்கியக்கேடு யாவும் இப்போது ஒழிந்துபோனதல்லவா? அப்படியே இந்தவிஷயத்திலும் ஆகுமென்றுஞ்சொன்னார். இரண்டாவது இந்நாட்டில் கிறிஸ்துவின் சுவிசேஷம் எவ்வாறு விர்த்தியடைகிற தென்பதைப்பற்றி, சுவி

சோஷந்தான் இந்தியாவுக்கு அவசியமென்றும், சுவிசேஷந்தான் மேனாட்டாருக்கும் கீழ்நாட்டாருக்குமிருக்கிற பிளப்பை ஒற்றுமைப் படுத்துமென்றும், ஆகையால் அதைப் பரப்புவதே நமது முயற்சியா யிருக்க வேண்டுமென்றுங் கூறினர். சுவிசேஷப் பிரபல்ய விஷயத்தில் மூன்று ஆலோசனைகளை யெடுத்துச் சொன்னார். (1) பக்ஷமுள்ளவார்த்தைகள். இந்தியா முத்துக்கள் நிறைந்த தேசம். கிறிஸ்தவர்களும் தங்கள் ஜீவியம் நடத்தையாகிய முத்துக்களையுடையவர்களா யிருக்க வேண்டும் (2) தேசாபிமானம். கிறிஸ்தவர்களுடைய தேசாபிமானம் சட்டத்துக் கடங்கினதய யிருக்கவேண்டும். (3) முந்திச் செல்லுதல். கிறிஸ்தவர்கள் முந்திச் செல்லும் பயோனீர்களா யிருக்கவேண்டும். சில காலமாய் இந்தியாவில் கிறிஸ்தவ மிஷன்கள் விர்த்தியடைந்து வருகிறது என்று கூறி இந்திய மிஷனெரி சங்கத்தைப்பற்றிப் புகழ்ச்சியாய்ச் சிலவார்த்தைகள் பேசி முடித்தார். அக்கிராசனாதிபதிக்கு வந்தனங்கூறிக் கூட்டங் கலைந்தது.

News and Notes.

சமாசாரக் குறிப்புகள்.

Arrest of an England-returned Student:—சுகாதாரக் கல்விகற்று வரும்படி இங்கிலாந்துக்குச் சென்றிருந்து பிரஞ்சு மேய்ல் ஸ்டீமரேறித் திரும்பிவந்த சென்னைவாசியாகிய R.C. ராவ் என்ற இந்தியமாணவன் ஒருவன் ஜனுவரிமாதம் 28ௗ பம்பாயில் வந்திறங்கினபோது, அவனுடைய பெட்டியின் அடிப்புறத்தில் பிரவுணிங் கைத்துப்பாக்கியொன்றும் அதற்குரிய மருந்துகளு மிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. அல்லாமலும் தான் தரித்திருந்த உடைக்குள்ளே வெடி குண்டுகள் செய்வதையும் உபயோகிப்பதையும்பற்றியவிதிகளடங்கிய டைப்ரைற்றிங் செய்திருந்த ஒரு புஸ்தகமும் கண்டுபிடிக்கப்பட்டது. இவன் அரெஸ்டு செய்யப்பட்டிருக்கிறான். இதைப்போலவே இங்கிலண்டிலிருந்து திரும்பி வந்த சில மாணவர்களிடம் ஆயுதங்களும் இராஜதுவேஷ புஸ்தகங்களும் இருக்க பம்பாய் கஸ்டம் ஆபீஸார் கண்டுபிடித்திருக்கிறார்களென்று "பம்பாய் கெஸற்று" கூறுகிறது. இந்திய அராஜக செயலை வளர்க்குமிடம் இங்கிலண்டே போலும்.

British Politics:—சென்ற சிலமாதகாலமாய் லண்டனில் பெரிய ஆரவாரத்துக்கிடமாயிருந்த பார்லிமெண்டு ஜெனரல் எலெக்ஷன் முடிந்து போய்விட்டது. லிபரல் கக்ஷியார் தொகை 274 ஆகவும், யூனியனிஸ்ட் கக்ஷியார் தொகை 273 ஆகவும், நாஷனலிஸ்ட் கக்ஷியார் தொகை 80 ஆகவும், லேபர் கக்ஷியார் தொகை 40 ஆகயும் ஏற்பட்டிருக்கிறபடியால் லிபரல் கக்ஷியாரே கவர்ன்மெண்டை நடத்தும் பொறுப்பேற்றிருக்கிறார்கள். ஆனால் சென்ற பார்லிமெண்டில் யூனியனிஸ்ட் கக்ஷியாருக் கிருந்தபலத்தை விட அதிக பலம் இப்போதவர்களுக் கேற்பட்டிருக்கிறது. தற்சமயம் லிபரல் கக்ஷியாருக்கு நாஷனலிஸ்ட் கக்ஷியார் அல்லது லேபர் கக்ஷியார் உதவியில்லாமல் மெஜாரிடி கிடைக்கக் கூடாத நிலைமையிலாய் விட்டது. இதனால் லிபரல் கக்ஷியார் விழிப்பாட்டத்தி லிருக்கிறார்கள். நாஷனலிஸ்ட் கக்ஷியார் அயர்லாந்துக்குச் சுயாதீன அரசாட்சி சம்பாதிப்பதிலும், லேபர் கக்ஷியார் தங்களுடைய கோரிக்கையை முடிப்பதிலும் கண்ணுண்டாயிருப்பதால் லிபரல் கக்ஷியார் இவர்கள் விருப்பத்துக்கிணங்கினாலல்லாமல் இவர்கள் அவர்களோடு சேரமாட்டார்கள். தற்காலம் அயர்லாந்து கக்ஷியார எண்ணத்துக்கு லிபரல் கக்ஷியார் ஒத்துவரக்கூடியதாயில்லை. ஆகையால் லிபரல் கக்ஷியாருக்குப் போதுமான மெஜாரிடியில்லாமல் சங்கடமான நிலைமையிலிருக்கிறார்கள். மேலும் பழைய பார்லிமெண்டு கலைந்ததே லிபரல் கக்ஷியார் கொண்டுவந்த பட்ஜெட்டையும் லார்ட்ஸ் சபையாரின் மிதமிஞ்சின அதிகாரத்தைக் குறைப்பதையும் பற்றிய விவாதத்தால் தான். லிபரல் கக்ஷியாருக்கு இப்போ தேற்பட்டிருக்கிற மெஜாரிடியைக் கொண்டு இவைகளைத் தங்களுக்குச் சாதகமான வழியில் நிறைவேற்றிக் கொள்ளமுடியாது. ஆசவே கூடிய சீக்கிரத்தில் இன்னோர் எலெக்ஷனுக்கு வழியுண்டாகுமென்றஞ்சப்படுகிறது.

Drink and Wine Merchants:—உலகத்தின் பலபாகங்களில் குடியை யொழிப்பதில் அரசாங்கங்கள் துணிந்த போதிலும், மதுபான வர்த்தகர்களின் மிண்டுத்தனத்தாலே அரசாங்கத்தார் வலிகுன்றியிருக்கிறார்கள். பின்னாண்டில் மதுபானம் செய்வதையும் விற்பதையும் தடுக்க அவ்விடத்து அதிகாரிகளால் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு அது ருஷிய சக்கிரவர்த்தியின் அங்கிகாரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பின்லாண்டுக்குச் சாராய ஏற்றுமதி செய்யும் பிரஞ்சு வர்த்தகர்கள் கூடி ருஷிய சக்கிரவர்த்தியைப் பலவந்தம் பண்ணினதால், அவர் அச்சட்டத்தை அங்கிகரியாமல் தள்ளிப்போட்டார். சில நாட்களுக்கு முந்தி இங்கிலாந்தில், விவாதத்திலிருக்கும் பட்ஜெட்டை ஆக்ஷேபித்து ஒரு பார்லிமெண்டு மெம்பர் பேசினார். அவர் விசேஷமாய் இந்த பட்ஜெட் சாராயத்தில் வரும் வருமானத்தைக் குறைக்கிறதென்றுகண்டித்தார். சபையிலிருந்த ஒருவர் "அந்த வருமானம் குறைந்தால் அக்கரையில்லை" என்று கூக்குரலிட்டார். அப்போது மெம்பர், "அதனால் எத்தனையோ புட்டிக் கடைக்காரருக்குப் பிழைப்பு இல்லாமற் போகிறதே" என்றார். சபையிலிருந்தவர் "புட்டிக் கடைக்காரருக்காக ஜனங்கள் சாராயம் குடிக்கதேண்டுமோ?" என்று கேட்டார். அதற்கு மெம்பர் ஒரு உத்தரவும் கொடுக்கவில்லை.

Drink the only enemy England has to fear:—லண்டனில் சில நாட்களாகப் பெரிய சுவர் நோட்டீஸ்களாகவும், சிறு கைத்தாள்களாகவும் ஒரு சங்கதி அச்சிடப்பட்டு எங்கும் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. அந்த நோட்டீஸில் கண்டிருக்கும் விஷயம் இங்கிலண்டு பயப்படவேண்டிய ஒரே சத்துருவைப் பற்றியது தான். அந்தச் சத்துரு குடியேயன்றி வேறில்லையென்று அதில் சொல்லப் பட்டிருக்கிறது. அதில் உலகத்தின் பலராச்சியங்களும் தங்கள் கப்பற்படைகளுக்காக செலவிடும் செலவை ஒருபுறத்திலும், இங்கிலண்டு மட்டும் குடியிற் செலவிடும் செலவை ஒருப்புறத்திலும் எடுத்துப்பதித்து இங்கிலண்டு குடியில் செலவிடும் செலவு அந்த எல்லாச் செலவையும் மிஞ்சிவிடுகிற தென்று காட்டியிருக்கிறது. உலகத்திலுள்ள இராச்சியங்களெல்லாம் தங்கள் கப்பற் படைகளுக்குச் செலவிடுந்தொகை 120,810,435 பவுன். இங்கிலண்டு மாத்திரம் குடியில் செலவிடுந்தொகை 161,060,482 பவுன். ஆகவே சகல முதல்தரமான உலகத்துக் கப்பற்படை செலவைவிட 40,250,047 பவுன் இங்கிலண்டு குடியில் செலவழிக்கிறது என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

The Release of the Deporties:—வங்காளத்து அராஜகச் செய்ல்களுக்கு உடந்தையாயிருந்ததாகச் சமுசயிக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டிருந்த 9 இந்திய கனவான்களேயும் அவர்கள் 14 மாதம் அடைத்து வைக்கப்பட்டிருந்ததின் பிறகு லார்ட்மின்டோ விடுதலை செய்துவிட்டார். எதிர்ப்பாராதிருக்கையில் இவர் காட்டின தயவு அநேகருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது.

Bengal Dacoities:—அதிக ஜனசங்கையுள்ள போலிகாந்தி என்னும் ஊரில் பிப்ரவரி மீ 7வ மாலை 12 வங்காளி வாலிபர்கள் தங்கச்சட்டுப்போட்ட மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டு பிரபுக்களைப் போல வேடம் பூண்டு ராக்கால் முக்கர்ஜீ என்னும் அவ்வூர் பொருளாளி வீட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் வேடத்தினால் சந்தேகமில்லாமல் வீட்டுள்ளே அழைத்துச் செல்லப்பட்டார்கள். உள்ளே சென்றதும் அவர்கள் தாங்கள் எந்தக் காரியத்தை முன்னிட்டு வந்தார்களோ அதைத்தெரிவித்தார்கள். வீட்டுஜனங்கள் திடுக்கிட்டு அலற ஆரம்பித்தார்கள். ஆனால் திருடர்கள் துப்பாக்கி, கத்தி, ஈட்டிமுதலிய ஆயுதங்களைப் பிரயோகித்து அக்கம் பக்கத்து ஜனக்கூட்டத்தையும் ஓட்டி, வீட்டிலகப்பட்ட ஆபரணங்களோடும் ரொக்கத் தொகையோடும் ஓட்டம் பிடித்தனர். போலீஸ் விசாரணை நடந்துவருகிறது. ஜெஸஸூர் ஜில்லாவில் இன்னொரு கொள்ளை நடந்தது. அங்கும் வங்காளிகளே ஒரு தோல்வியாபாரி வீட்டைத்தாக்கி ரூ10000 கொள்ளையிட்டுச்சென்றார்கள். சிராம்பூரில் அப்துல் என்னும் ஒரு மகமதிய வியாபாரி வீட்டில் 20 பேர்போல் புகுந்து ரூ 2000 பெறுமான சொத்துக்களைக் கொண்டு போனார்கள். இதெல்லாம் இராஜவிரோதிகளால் நடக்கிறகொள்ளைக ளென்னப்படுகிறது.

Shipping Disasters:—சென்ற இரண்டொரு வாரங்களுக்குள் பயங்கரமான சில கப்பற் சேதங்கள் நேரிட்டுப் போயின. ஜெனரல் சான்ஸி என்கிற பிரஞ்சுகப்பல் மார்சேல்ஸிலிருந்து போய்க்கொண்டிருக்கையில் மஜோர்க்கா கரையில் சேதப்பட்டுப் போயிற்று. பிரயாணிகளில் ஒருவன் தவிர மற்றெல்லாரும் மாண்டுபோனார்கள். கடும்புசலில் பாறையில் மோதியுடைந்ததாகச் சொல்லப்படுகிறது. மாண்டவர் தொகை 150. ஹாம்பன் என்னுமிடத்தில் லேமா என்கிற பசிப்பிக் கப்பல் உடைந்துபோனது. 120 பேர் மடிந்து போனார்கள். தவிர டிஹிரானிலிருந்துருஷிய அதிகாரிகள் தெரிவிக்கிறபடி இரண்டு பிரயாணிகள் கப்பலும் ஒரு சாமான் கப்பலும் கடும் புசலிலகப்பட்டு உடைந்து போயினவாம். இவைகளில் 200 பேருக்கதிகமாய் மாண்டு போயினர். இந்த வருஷம் மகா சேதமுள்ள புசல்களோடும் வெள்ளங்களோடும் ஆரம்பித்திருக்கிறது.

The French Floods:—பிரான்ஸில் பாரீஸ் முதலிய பல பட்டணங்களில் ஜனுவரிமாதக் கடைசியிலுண்டான பயங்கரமான வெள்ளத்தைப்பற்றி நமது பத்திரிகையில் விஸ்தீரணமாய் எழுதப் பத்திரிகையிடந்தரவில்லை. அதிக மழை வருஷித்ததினால் சேன் நதியில் பிரவாகம் வந்து பாரீஸ்பட்டணத்தையே முழுத்திவிட்டது. தெருக்களில் 20 அடி ஜலமிருந்தது. வீடுகளிலகப்பட்டுக் கொண்டவர்களை உயர்தப்பி மீட்சப் படகுகள் உபயோகிக்கப்பட்டன. ஆல்டோர்வில் என்னுமிடத்தில் 25 அடி ஜலம்தங்கிற்று 18000 பேர் தண்ணீரால் சூழப்பட்டு வீடுகளிலிருந்து வெகு கஷ்டத்தோடுவெளியேற்றட்டார்கள். அநேக தோட்டங்களும் வீடுகளும், இருப்புப் பாதைகளும்அழிக்கப்பட்டன இலக்ஷக்கணக்கான ஜனங்கள் வீடுவாசலற்று, உடையூணற்று வருந்துகிறார்கள். இவர்களுக்கு உலகத்திலுள்ளோரெல்லாரும் பணவுதவி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். பூகம்பவெள்ளத்தாலழிந்த மெஸீனாவைப் போல பாரீஸிருந்த தென்னப்படுகிறது. இப்போதும் வெள்ளம் பயமுறுத்துகிறது. பெல்ஜியத்திலும் வெள்ளச் சேதம் நேரிட்டது.

Halley's Comet:—அடுத்த மே மாதத்தில் இந்தியாவில் ஒரு வால்நக்ஷத்திரங் காணப்படும். இதற்கு ஹாலியினுடைய வால் நக்ஷத்திரம் என்று பெயர். ஹாலியென்பவர் 1656ஹூபிறந்த ஒரு வானசாஸ்திரி. 1741ல் மரித்தார். 1682-ம் வருஷம் இந்த வால் நக்ஷத்திரத்தைக் கண்டுபிடித்தார். இதற்குமுன் நான்கு தடவைகளில் இது தோன்றியிருக்கவேண்டு மென்றும், சுமார் 75 வருஷங்களுக்கு ஒருதரம் இதுகாணப்படுமென்றும், அப்படியே 1759-லும், 1835-லும் தோன்றுமென்றும் எழுதிவைத்தார். அவர் கணித்தபடியே தோன்றின. இப்போது 76 வருஷங்களுக்குப் பிந்தி இன்னொருமுறை தோன்றப் போகிறது. ஒருவேளை மார்ச்சு மாதக்கடைசியிலேயே காணப்படக் கூடுமென்னப்படுகிறது. ஐரோப்பாவில் காணப்படமாட்டாது.

The New Press Law:—நாசிக் கலெக்டர் மிஸ்டர் ஜாக்ஸன் அராஜகச்செயலுடைய துன்மார்க்கரால் கொலை செய்யப்பட்ட பிறகு, கல்கத்தா ஹைகோர்ட்டில் கேஸ் நடத்திக் கொண்டிருந்த் போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஸம்ஷுல் ஷாஅலம் என்பவரை 18 பிராயமுடைய ஒரு வங்காள சிறுவன் கைத்துப்பாக்கிக்கொண்டுசுட்டு வீழ்த்தினான். இவன் பிடிபட்டு மாணதண்டனையடைந்தான். இந்த அராஜகச் செயல்களெல்லாம் பத்திரிகைகளாலும் புஸ்தகங்களாலுமே தூண்டப்பட்டு வருகிற தென்றறிந்து இந்தியா கவர்ன்மெண்டார் புதிய பிரஸ் சட்டமொன்றுண்டாக்கிப் பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கும் புஸ்தகங்களுக்கும் கட்டுதிட்ட முண்டாக்கியிருக்கிறார்கள். இந்த திட்டங்கள் பத்திரிகைகளின் சுயாதீனத்தைக் குறைக்கு மானாலும் அராஜகசெயல்களை அடக்கவேண்டுமானால் இவ்விதசட்டம் இல்லாமல் தீராதென்றறியப்பட்டிருக்கிறது. இப்புதியசட்டப்படி சமுசயிக்கப்படும் பத்திரிகைகள் புஸ்தகங்கள் பிடிபட்டுச் சோதிக்கப்படும். பிரஸ் வைப்போர் ஜாமீன் கட்டவேண்டும். இராஜதுரோக விஷயங்களை யெழுதுவோர் கடுமையாய்த் தண்டிக்கப்படுவார்கள்.

நசரையார் சதகம்:—ஆண்டவருடைய அருண் மொழிகளின் மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப்பத்திரிகை தமிழ் எடிடரிடங் கிடைக்கும். ஒரு அணா லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

Dr. CLOUSTON ON ALCOHOL.

Under the auspices of the Glasgow branch of the British Medical Temperance Association, Dr. T S. Clouston, Edinburgh, delivered a lectur last Frnday night, in the Students' Union, Glasgow University, on "Alcohol and the Human Brain." Dr. W. L. Reid, president of the branch, occupied the chair, and there was a large attendance.

Dr. Clouston said that, looking to the extraordinary extent to which alcoholic drinks were used in this country, it was the duty of every intelligent man and woman—and especially of every student, who might by and by become a leader in his or her profession—to try to realise its effects on the human being. It was well-known that the result of large doses taken continuously over a period of years was to so transform the brain cells and interfere with the proper flow of blood to the brain as to seriously enfeeble the mind. The result was that the chronic drunkard could not think, he could not feel, and as to his moral nature—the sense of right and wrong—he had none. Besides this, the drunkard died at four or five times the rate of other men; he was more subject to almost every disease that the man who did not take drink, and his capacity for work was practically nil. Unfortunatel the evil effects of small quantities of alcohol were not so generally known, but it had been proved by practical experiment that even small quantities taken for a brief period resulted in a sensible lowering of the mental capacity for work, increased excitability, and a decided tendency to automatic instead of voluntary action.

Perhaps the worst result of all was continued Dr. Clouston, the destruction of mental inhibition or control, which rendered it well-nigh impossible to resist the craving for drink when once created. The effects on different brains were extraordinarily diverse, and some patients proved so much more susceptible than others that many doctors would rather not prescribe alcohol than take the risks of what might accrue. Seeing that it took twenty-five years for the brain cells to devolop fully, and that the brain was more suceplible during the process of development, he thought its prescription should be avoided wherever possible in the case of the young. It had also been proved that the brains of women did not stand alcohol so well as those of men, and that persons of a very nervous constitution were also specially susceptible, and should absolutely abstain from all intoxicating liquors. Persons of sedentary occupations and all who had not plenty of fresh air exercise should be exceedingly careful how they took alcohol, if they took it at all. It was a sad fact that the children of drinking parents died in very much larger numbers proportionately than the children of non-drinking parents, and congenital imbecility, or idiocy, was three times more common among children of drunkards than among those of other people. Indeed a tendency to alcohol, insanity, idiocy, and consumption were very frequently found in combination, and all were bad—not merely for their effect on the individual, but because they were liable to be transmitted to the future generation, and because that transmission meant the extinction of the race.—*Alliance News.*